**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

EA.No.3/2022 in EP.No.14/2012 in OS.No.26/2004 தேதி- 20.06.2025

(P.W.1) - ராஜமணி

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. ம.சா.ஆ.26 ஆவணம் செல்வராஜ் மற்றும் 16 பேர்கள் எந்த தேதியில் திருவட்டார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் நினைவில்லை. திருவட்டார் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாருக்கு 09.07.2010 ரசீது வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன புகாருக்கு திருவட்டார் காவல் நிலையத்தில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். என்னுடைய புகாருக்கு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று திருவட்டார் காவல் ஆய்வாளர் மீது மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன் என்றாலும் அந்த புகார் மனு ம.சா.ஆ.22 என்றால் சரிதான். மேற்சொன்ன ம.சா.ஆ.22 ஆவணத்தில் செல்வராஜ் உடன் நீதிமன்ற ஆமின், நீதிமன்ற ஆணையர், திருவட்டார் காவல் ஆய்வாளர் சேர்த்து 16 பேர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. காவல் துறை கண்காணிப்பாளர் மேற்சொன்ன புகார் மீது நடவடிக்கை எடுக்காததால் அவர் மீது பத்மநாபபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CR.M.P.No.16952/2010 என்ற மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனு விசாரணை செய்யப்பட்டது என்றால் விசாரணை செய்யாமல் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்சொன்ன தள்ளுப செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl.R.C(MD).No.493 of 2012 மனு தாக்கல் செய்தேனா என்றால் நினைவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl.R.C(MD).No.493 of 2012 உத்தரவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் கிழமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் படி உத்தரவு வழங்கப்பட்டது.

3. மேற்சொன்ன மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl.R.C(MD).No.493 of 2012 உத்தரவின் அசல் ஏ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது ஏ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் "After advancing his arguments, the learned counsel appearing for the petitioner submitted that he wants to withdraw the Criminal Revision Petition with liberty to raise all the objections in the Civil Suit, pending in O.S.No.53 of 1999, on the file of the Sub-

Court and he has also made an endorsement to that effect. Recording the submission, the learned counsel for the petitioner is permitted to withdraw this Criminal Revision Petition. In view of the same, this Criminal Revision Petition is dismissed as withdrawn" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. கிழமை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 53/1999 நிலை என்ன என்றால் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்சொன்ன வழக்கை கோப்பிற்கு எடுக்க இதனால் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அந்த மனு எண் தெரியுமா என்றால் நினைவில்லை. ஏற்கனவே செல்வராஜ் மற்றும் 16 நபர்கள் மீது வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு விசாரணை முழுமையாக விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டதால் மீண்டும் அதே பரிகாரம் கேட்டு அதே நபர்கள் மீது இந்நிறைவேற்று மனுவில் பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. 5. ஏற்கனவே அசல் வழக்கு எண். 53/1999 தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் இந்நிறைவேற்று மனுவில் நஷ்ட ஈடுகேட்டு என்ன பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

5. ஏற்கனவே செல்வராஜ் உயிருடன் இருந்தபோது இந்நிறைவேற்று மனு எண்.11/2009-ல் இடைகால மனு எண்.128/2010 தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு நிறைவேற்று மனு முடிக்கப்பட்டது என்பதால் இந்நிறைவேற்று இந்இடைக்கால மனுவில் அதே பரிகாரம் கேட்டு இந்த மனு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. மனு எண்.11/2009 -ல் உள்ள சொல்லப்பட்டுள்ள இடைக்கால மனு எண்.192/2010 மர அறுவை மில்லில் உள்ள இயந்திரங்களில் மதிப்பீடுகளை கணக்கெடுத்து கொடுக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அதுபற்றி தெரியாது. 10.03.2011 -ல் மேற்சொன்ன மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. நான் தற்போது இந்த இடைக்கால மனுவில் எதிர் மனுதாரர் சொத்தை பற்றுகை செய்து கொடுக்கவேண்டும் என்று கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில்தான் ஒரு சொத்தை பற்றுகை செய்ய முடியும் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு எதிர்மனுதாரர் மீது முறையாக தீர்ப்பு ஏதாவது எனக்கு ஆதரவாக

வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்னவாறு எனக்கு ஆதரவாக எந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெறாததால் எதிர்மனுதாரர் அவர்களின் வாரிசுகள் அனுபவித்து வரும் பற்றுகை செய்யமுடியாது என்றால் சரியல்ல. எனவே EA.No.1/2019 and EA.No.3/2022 ஆகிய இடைக்கால மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.